# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 62/2022**

பெயர்:**முருகன்** நாள்: 19.08.2025.

வா.சா.1 – பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – முருகன் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 1:05</u>

பிரதிவாதிகளை எனக்கு எத்தனை வருடங்களாய் எப்படி எனக்கு தெரியும் என்றால், தாவா நிலத்தில் பிரச்சனை செய்வதால் கிரயம் வாங்கி சில நாட்கள் கழித்து எனக்கு அவர்களை தெரியும். தாவா சொத்திற்கும் நான் குடியிருந்த வீட்டிற்கும் சுமார் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால், சுமார் 3 கிலோமீட்டர் இருக்கும். தாவா சொத்தை வாங்குவதற்கு முன்பாக தாவா சொத்தின் அருகில் உள்ளவர்களை விசாரித்தேனா என்றால், விசாரித்தேன். பிரதிவாதிகள் தாவா சொத்தின் அருகில்தான் வசிக்கிறார்கள் என்றால், சரிதான். அக்கம்பக்கத்தில் யார் யாரை நான் விசாரித்தேன் என்றால், பெயர் தெரியவில்லை. தாவா சொத்தை வாங்குவதற்கு முன்பாக எந்தெந்த ஆவணங்களை நான் பார்த்தேன் என்றால், சின்னதம்பி கவுண்டர் பெயரில் உள்ள கிரயப்பத்திரத்தின் அசலையும், மூலப்பத்திரத்தையும், வில்லங்க சான்றிதழையும் பார்த்தேன். தாவா சர்வே எண். 573/1A ல் யார் யாருக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்ற விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால், தெரிந்துகொள்ளவில்லை. தாவா சொத்திற்கான பட்டா யார் யார் பெயரில் உள்ளது என்ற விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால், தெரிந்துகொள்ளவில்லை. வா.சா.ஆ.1 ல் சின்னதம்பி கவுண்டர் கிரயம் பெற்றதாக உள்ள சொத்து முழுவதையும் வா.சா.ஆ.2 படி நான் கிரயம் பெற்றுக் கொண்டேனா என்றால், ஆமாம். சின்னதம்பி கவுண்டர் பெயரில் உள்ள ஆவணத்தை

இந்த நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், வழக்கறிஞரிடம் தான் கேட்கவேண்டும். வா.சா.ஆ.1 ன் நகலை பெற்றதாக குறிப்பிட்டுள்ள மாரிமுத்து என்பவரை தெரியுமா என்றால், தெரியும் அவர் என்னுடைய மாமா ஆவார். இந்த நகலானது 02.11.2018 ஆம் ஆண்டு வாங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.1 பதிவு நகலை யார் என்னிடம் கொடுத்தார்கள் என்றால், எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 கடந்த 24.02.1966 ஆம் தேதியில் நான்கு புற சக்குபந்திகளை குறிப்பிட்டும் அளவுகளை குறிப்பிட்டும் ஏற்பட்டிருந்தபோதும் ஏன் சின்னதம்பி கவுண்டரோ அவரது வாரிசுகளோ தனிப்பட்டா பெறவில்லை எனத்தெரிந்து கொண்டேனா என்றால், இல்லை. வா.சா.ஆ.1 ன் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகள் படி மேற்படி சின்னதம்பி கவுண்டரின் வாரிசுகள் சுவாதீனத்தில் உள்ளார்களா என்று நான் கிரயம் செய்வதற்கு முன்பு சர்வேயர் மூலம் தாவா சொத்தினை அளந்து பார்க்க நடவடிக்கை எடுத்தேனா என்றால், எடுத்தேன். எந்த தேதியில் எந்த சர்வேயர் மூலம் அளக்க நடவடிக்கை எடுத்தேன் என்றால், இடங்கணசாலை அரசு சர்வேயர் மூலம் நடவடிக்கை எடுத்தேன். எந்த தேதியில் பணம் செலுத்தி அளவீடு செய்தேன் என்றால், கிரயம் வாங்கி சுமார் 1 மாதம் கழித்து பணம் செலுத்தினேன். கிரயம் பெறுவதற்கு முன்பாக சர்வேயர் மூலம் நிலத்தை அளக்க நடவடிக்கை எடுத்தேனா என்றால், தனியார் சர்வேயர் மூலமாக அளந்தேன். எந்த தேதியில் எந்த சர்வேயர் மூலம் அளந்தேன் என்றால், தேதி நியாபகம் இல்லை இடங்கணசாலை கிராமம் தூதனூரைச் சேர்ந்த குமார் என்ற சர்வேயர் மூலம் அளந்தேன். என்னுடைய வழக்குரையிலையோ முதல் விசாரணையிலோ கிரயம் வாங்குவதற்கு தனியார் சர்வேயர் மூலம் நிலத்தை அளந்தேன் என்ற விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால், இல்லை. அவ்வாறு

அளந்ததற்கான வரைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. தாவா சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பும் பின்பும் நிலத்தை அளக்கவில்லை என்றும் வழக்கிற்காக தாவா சொத்தை சர்வேயர் மூலம் அளந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வழக்குரையில் குறிப்பிடாத சங்கதிகளை பொறுத்து குறுக்கு விசாரணையில் நான் சாட்சியம் அளிப்பது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 1:30

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2025.08.19 16:56:18 +1000

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.